**புதுச்சேரி மாநிலம், சாகர்மாலா (கடல் மாலை) திட்டத்தின் கீழ் புதுச்சேரி துறை முகத்தை மேம்படுத்தும் வேலையின் முதல் கட்டமாக சிறுகப்பல்கள் மற்றும் படகுகள் செல்லும் கால்வாயை தூர்வாருதல் மற்றும் வடிகால் கால்வாய் இடையே தடுப்புச் சுவர் அமைப்பதற்காக 02.08.2019 அன்று பழைய துறைமுக வளாகம், துறைமுகத் துறை, துமாஸ் வீதி, புதுச்சேரி நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் நடவடிக்கை விவரங்கள்.**

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் 02.08.2019 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் முனைவர்.அருண்.தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தொடங்கியது.

திருமதி ஸ்மிதா. ரா இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மற்றும் உறுப்பினர் செயலர், புதுச்சேரி மாசுகட்டுப்பாட்டு குழுமம் அவர்கள் குழுமியிருந்த அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் விதிமுறைகளை எடுத்துரைத்தார்.

மாவட்ட ஆட்சியர் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை துவக்கி வைத்து கூறியதாவது சாகர்மாலா (கடல்மாலை) திட்டத்தின் கீழ் புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்தும் வேலையின் முதல் கட்டமாக சிறுகப்பல்கள் மற்றும் படகுகள் செல்லும் கால்வாயை தூர்வாருதல் மற்றும் வடிகால் கால்வாய் இடையே தடுப்புச்சுவர் அமைப்பது இந்த திட்டத்தின் செயல்பாடு ஆகும். சுற்றுச்சூழல் சான்றிதழ் பெறுவதின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிப்பு 2006 படி துறைமுகத்துறை சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலைமாற்ற அமைச்சகத்தை அணுகியுள்ளது. சுற்றுச்சூழல் சான்றிதழ் செயல்முறையின் ஒரு பகுதியாக, கருத்துகேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் திட்டத்தின் அறிமுக கருத்துக்களைக் கூறி தொடங்கிவைத்தார்.

திரு ஆர். ஜெகஜோதி, செயற் பொறியாளர், துறைமுகத்துறை, புதுச்சேரி திட்ட உரிமையாளரின் சார்பாக திட்டத்தை விவரித்தார். தொடர்ச்சியாக துறைமுகத் துறையின் தொழில்நுட்ப ஆலோசகர் சென்னை கரையோர ஹைட்ராலிக்ஸ் (பி) லிமிடெட், இன்டோமர், நிர்வாக இயக்குநர் டாக்டர் பி. சந்திரமோகன், திட்ட விவரங்கள் குறித்த விளக்கங்களை விரிவாக விளக்கினார். அதாவது திட்டத்தின் முக்கியத்துவம், முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள், திட்ட நன்மைகள், மீனவர்கள் நலன், சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தணிப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம், பிந்தைய திட்ட கண்காணிப்பு போன்றவை.

விளக்க காட்சியை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களை தங்கள் பெயர் மற்றும் ஊர் குறிப்பிட்டு, திட்டம் சம்மந்தமான ஐயங்கள், விளக்கங்கள் மற்றும் கருத்துக்கள் ஏதுமிருப்பின், ஒவ்வொருவராக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார். இதையடுத்து, பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:

**1. திரு. N.S. கலைவரதன், புதுச்சேரி மீனவர் களம், புதுச்சேரி:**

i. இந்த திட்டம் முழுவதும் துறைமுகத்தின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்பாடாகும் மீனவர்களுக்கோ மற்றும் மீன்பிடித்தலுக்கோ எந்தவித நன்மையும் இல்லை.

ii. எனவே, இந்த திட்டம் மீனவர்களுக்கு பயன் அளிக்காது.

**2. திரு. காங்கேயன், மீன்பிடி படகு உரிமையாளர், வீராம்பட்டிணம், புதுச்சேரி:**

i. புதுச்சேரியில் இந்த துறைமுகத்தை நிறுவுவதற்கு ஏற்கனவே நாங்கள் எதிர்த்தோம். அது சரியாக வடிவமைக்கப்பட்டிருந்தால், மணல் படிவு காரணமாக முகத்துவாரம் மூடுவதற்கு சரியான தீர்வு அந்த நேரத்தில் கிடைத்திருக்கும்.

ii. கடலில் கழிவுகள் கலப்பதை கட்டுபடுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்றால் இந்த திட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம்.

3. திரு. சந்திரன், மீனவர்கள் பிரதிநிதி, புதுச்சேரி:

i. தேங்காய்திட்டு துறைமுகம் சரியாக வடிவமைக்கப்பட வேண்டும் ஏனென்றால் அது சரியாக வடிவமைக்கப்படவில்லை. முதற்கட்டமாக தற்போதுள்ள மணல் படிவு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். துறைமுகத்தை 24 மணி நேரமும் பயன்பாட்டில் இருக்கும் படி வைக்கவேண்டும்.

ii. முகத்துவாரத்தில் சேறு படிவதை தவிர்க்க நுழைவு வாயிலை குறைக்க வேண்டும்.

4. திரு. செல்வமணிகண்டன், தலைவர், சதுப்புநிலபாதுகாப்பு சங்கம்:

i. ஏற்கனவே இருக்கும் துறைமுகத்தால் வைத்திக்குப்பம், காலாப்பட்டு வரை கடற்கரையை நாம் இழந்துள்ளோம் மற்றும் சதுப்பு நிலகாடுகளைப் பாதுகாக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ii. காரைக்கால் துறைமுகத்தினால் அதனைச் சுற்றியுள்ள மீனவர்களும் மீனவ கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அதே போல் இந்த திட்டத்தின் மூலம் நிலத்தடிநீர் பாதிக்கப்படும் குடிநீர் பற்றாக்குறையும் ஏற்படும்.

iii. இந்த திட்டத்திற்கான சாலை மற்றும் போக்குவரத்து தொடர்பான விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

5. திரு. ராஜா, தேங்காய்திட்டு, புதுச்சேரி:

i. இந்த திட்டத்தின் மூலம் மீன்பிடி தொழிலை மட்டுமே முழுமையாக சார்ந்துள்ள மீனவர்களுக்கும் மற்றும் துறைமுகத்தின் அருகில் உள்ள கிராம இளைஞர்களுக்கு மட்டும் பணிவழங்க வேண்டும்.

ii. சுத்திகரிக்கப்படாத கழிவுகள் கடலில் கலப்பதை தவிர்க்க வேண்டும்.

6. திரு. இளங்கோ, தலைவர், தேசிய மீனவர் பேரவை, புதுச்சேரி:

i. துறைமுகத்தின் முகத்துவாரம் அடிக்கடி மணலால் மூடப்படுவதால் மீன்பிடித்தல் பாதிக்கப்படுகிறது. சாகர்மாலா திட்டத்தின் கீழ் இந்த முகத்துவாரம் தூர்வாரப்படுவதால் நிரந்திர தீர்வு கிடைக்கும்.

ii. புதுச்சேரி வர்த்தக துறைமுக திட்டம் மீனவர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் கடலை பாதிக்காத வகையில் செயல் படுத்த வேண்டும்.

iii. இந்த திட்டத்திற்கு 44 கோடிக்கு மேல் நிதியுதவி அளிக்க வேண்டும்.

7. திரு. வீரமணி, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி:

துறைமுகத்தை விரிவுபடுத்தும் போது, வம்பாகீரப்பாளையம் கிராம மக்கள் தங்கள் கிராமத்திலிருந்து இடம் பெயரும் நிலைமை மீண்டும் நிகழா வண்ணம் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் கடற்கரை சாலை மற்றும் ரயில் பாதை சேர்க்கப்பட்டுள்ளதால், மாசுபாட்டை கட்டுபடுத்தவும், சுற்றுச்சூழல் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

8. திரு. சக்திவேல், மீனவர்கள் பிரதிநிதி, புதுச்சேரி:

i. துறைமுகத்தை முகத்துவராம் அடிக்கடி மணலால் மூடப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் அதை சரி செய்ய வேண்டும். மீனவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

ii. இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மக்களை இடமாற்றம் செய்யக்கூடாது.

9. திரு. விஸ்வநாதன், வீராம்பட்டினம், புதுச்சேரி:

i. ஏற்கனவே துறைமுகத்தை தூர்வாருவதற்கு ரூ.21.50 கோடி செலவிடப்பட்டுள்ளது ஆனால் இந்த துறைமுகம் வழியே இயந்திர படகு கூட மீன் பிடித்தலுக்காக செல்ல முடியவில்லை.

ii. ரூ.44 கோடியில் துறைமுகத்தையும் மீனவர்களையும் எவ்வாறு மேம்படுத்துவது? எனவே, துறைமுகத்துறைக்கு கூடுதல் மானியம் பெறுவதற்காக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி மாசுக்கட்டுபாடு குழுமம் போன்ற துறைகள் ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து அமைச்சகத்திடம் சமர்பிக்க வேண்டும்.

10. திரு. புத்துபட்டான், மீனவர் சங்க பிரதிநிதி, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி:

அடிப்படை வசதி கூட கிடைக்காமல் வம்பாகீரப்பாளையம் கிராம மக்கள் அவதிபடுகிறார்கள். முதலில் அடிப்படை வசதிகள் அளித்த பிறகு இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

11. திரு.சுறா வெங்கடசே பெருமாள், மீனவர் விடுதலை வேங்கைகள், புதுச்சேரி:

i. மக்களுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி முழுமையாக தெரிவிக்கவில்லை.

ii. மீனவர்களுக்கு இந்த திட்டம் நன்மை பயக்குமெனில், இதை வரவேற்கிறோம்.

12. திரு. பாலமோகன், நல்லாட்சிக்கான கூட்டு இயக்கம், புதுச்சேரி:

i. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு/சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் அடிமட்ட மக்களை சென்றடையவில்லை.

ii. மணல் துணை வழியாக செல்லும் அமைப்பு செயல்படுத்தப்படவில்லை.

iii. இந்த திட்டத்தின் கீழ் மணல் துணை வழியாக செல்லும் அமைப்பு, மணல் கொட்டும் அமைப்பு மற்றும் கடற்கரை வளம் ஆகியவை சேர்க்கப்படலாம்.

iv. கார்ப்பரேட்டுக்கு ஆதரவாக அமைச்சகம் இந்த திட்டத்தை செயல்படுத்துகிறது மற்றும் மீனவர்கள் மற்றும் மீன்பிடித்தலுக்கான நன்மைகள் ஏதும் இல்லை.

v. மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக துறை முகத்தின் முகத்துவாரத்தை அவ்வப்போது தூர் வாரவேண்டும்.

vi. சதுப்புநிலக் காடுகளை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யகூடாது.

**13.** திரு. தேவநாதன், மக்கள் நாடி அமைப்பு, புதுச்சேரி:

i. இந்த திட்டத்தின் கீழ் அடுத்த 20-30 ஆண்டுக்களுக்கான தொடர் செயல் திட்டம் என்ன?

ii. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் விபரங்களை நோட்டிசாக அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

iii. தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கடலரிப்பிலிருந்து கடற்கரையை பாதுகாக்கும் திட்டத்தின் நன்மை என்ன?

**14.** திரு. பெருமாள், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், புதுச்சேரி:

i. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் குறித்த தகவல்கள் ஒரு செய்தி தாளில் மட்டுமே பிரசுரிக்கப்பட்டது மேலும் இது பெரிய அளவில் மக்களை சென்றடையவில்லை.

ii. இந்த திட்டம் கார்ப்பரேட்டுக்கு சாதகமாக உள்ளது. பொதுமக்களுக்கு சாதகமாக இல்லை.

iii. நாங்கள் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் இல்லை, ஆனால் அழிவினை ஏற்றுக் கொள்ளமுடியாது.

iv. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் நீண்ட கால சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் சமுக தாக்கம் சேர்க்கப்பட வேண்டும்.

v. எண்ணெய் கசிவு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

**15.** திரு. நடராஜன், உறுப்பினர், மீனவர் பேரவை, வைத்திகுப்பம், புதுச்சேரி:

இந்த திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை வளர்க்க உதவும்.

**16.** திரு. கங்காதரன், மீனவர் விடுதலைஇறக்கைகள், புதுச்சேரி

i. இந்த திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும், அதனால் நாங்கள் எதிர்க்கிறோம்.

ii. பாரம்பரியமான மீன்பிடி தொழில் பாதிக்கும்.

iii. இந்த திட்டத்தை பற்றி முழுமையான விளக்கம் பொது மக்களுக்கு அளிக்கப்படவில்லை.

iv. துறைமுக விரிவாக்கத்தை வரவேற்கிறோம். அதே சமயத்தில் சாகர்மாலா (கடல்மாலை) திட்டத்தை எதிர்கிறோம்.

**17.** திரு. ரகுநாத், நல்லாட்சிக்கான கூட்டு இயக்கம், புதுச்சேரி:

i. திட்ட நன்மைகள் மற்றும் தாக்கங்கள் குறித்து சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆய்வில் கருத்து வேறுபாடு உள்ளது.

ii. இத்திட்டத்தில் துறைமுகத்தை தூர்வாருதல் மிகக் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

iii. கடற்கரை சார்ந்த இடங்களில் குடிதண்ணீர் ஆய்வில் மொத்த இடைநீக்கம் செய்யப்பட்ட திடப்பொருள் (TDS) மிக அதிகமாக உள்ளது. ஆனால் திட்ட நகலில் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

iv. புயல் மற்றும் மழைக் காலங்களில் கழிவு நீர் வாய்கால் வழியாக கடலில் வந்து சேறும். பிளாஸ்டிக் கழிவு குப்பைகளை தவிர்க்க எவ்வித பதிலும் இத்திட்டத்தில் இல்லை.

v. ஆகையால் இத்திட்ட நகலை மறு சீரமைப்பு செய்ய வேண்டும்.

vi. திடக்கழிவு கலக்கும் வாய்காலை தூர்வாறும் மண்ணை திரும்பவும் கடலின் ஆழத்தில் கொண்டு போய் கொட்டினால் கடல் நீர் மாசு அடைந்து கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

18. திரு. பாஸ்கரன், மீனவர் பேரவை, புதுச்சேரி:

i. மீன்வளம் குறைந்துவிட்டது.
ii. தற்சமயம் மீனவர்கள் மாற்று வேலைக்கு சென்றுவிட்டனர்.
iii. கடற்கரை முகத்துவாரத்தை தொடர்ந்து தூர்வார செயல் திட்டம் வேண்டும்.
iv. துறைமுகம் எல்லா நேரமும் இயங்க ஆவணம் செய்ய வேண்டும்.
v. இத்திட்டத்தினால் கடலில் எண்ணெய் மாசு ஏற்படும் காரணங்கள் மற்றும் அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆய்வில் குறிப்பிடப் படவில்லை.

19. திரு. அரோபில்லோ, நல்லாட்சிக்கான கூட்டு இயக்கம், புதுச்சேரி:

i. புதுச்சேரி துறைமுகம் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவிற்க்கு இயற்க்கையாக அமைந்த துறைமுகம். அதனை நாம் சரியாக பயன்படுத்தவில்லை.
ii. கடற்கரை முகத்துவாரத்தை அவசியம் தூர்வாறப்பட வேண்டும். தூற்வாறப்படும் மணல் அளவு இத்திட்டத்தில் மிகக் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.
iii. இத்துறைமுகத்தில் தூர்வாறப்படும் மணலின் அளவு 5 இலட்சம் கன மீட்டர் குறையாமல் இருந்தால் முகதுவாரத்தில் மணல் சேருவதை நிரந்திரமாக தடுக்க முடியும்.
iv. தூர்வாறப்படும் மணலை கடலின் ஆழத்தில் கொண்டு போய் கொட்டுவதற்கு முன் நிலத்தில் வைத்து பரிசோதனை செய்து பின் கடலில் கொட்டலாம்.

**20.** திரு. போத்ராஜ், படகு சங்கம், புதுச்சேரி:

i. ஏற்கனவே கடற்கரை ஓரமாக கல்கொட்டியதனால் கடற்கறை ஓரமாக இருந்த பல மீனவ கிராமங்கள் அழிந்துவிட்டன.

ii. புதுவை பழைய துறைமுகத்தை கல்கொட்டி விரிவாக்கம் செய்ததினால் மூர்த்திக்குப்பம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கூறி முடித்த பின்னர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, சுற்றுச்சூழல் பொறியாளர், திரு. க. காளமேகம் அவர்கள் பொதுமக்களின் கருத்துக்கள் புது தில்லி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலைமாற்ற அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று கூறினார்.

பின்வரும் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வ பிரதிநிதிதுவங்கள் (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

1. சுப்பையா பாரதி இளைஞர் மன்றம், புதுநகர், தேங்காய்திட்டு, புதுச்சேரி.
2. தேங்காய்திட்டு கிராம மக்கள், புதுச்சேரி.
3. புதுச்சேரி மீனவ மக்கள் சங்கம், வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி.
4. நல்லாட்சிக்கான கூட்டு இயக்கம், புதுச்சேரி.
5. மீனவர் விடுதலை சிறுத்தைகள், கணபதிசெட்டிகுளம், புதுச்சேரி.
6. புதுச்சேரி மீனவர் பேரவை, முதலியார்பேட், புதுச்சேரி.
7. புதுச்சேரி சுற்றுச்சூழல், சதுப்பு நிலகாடுகள் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி சங்கம், புதுச்சேரி.
8. திரு. S. நடராஜன், வைத்திக்குப்பம், புதுச்சேரி.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மற்றும் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமத்தின் முனைவர் R. சகாய ஆல்பிரெட், முதுநிலை அறிவியல் அதிகாரி அவர்கள் கூட்டத்தின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் முடிவுற்றது.

பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் குறித்து செய்தித் தாள்களில் வெளியிடப்பட்ட விளம்பரம், கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் பட்டியல், கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளி குறுந்தகடுகள் (DVD) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(முனைவர் T. அருண். தி, இ.ஆ.ப.)
மாவட்ட ஆட்சியர்,
புதுச்சேரி மாவட்டம், புதுச்சேரி.